# கனிமங்களை சட்டத்திற்குப் புறம்பாக யாரும் எடுத்துச் செல்ல முடியாது!

## சட்டப்பேரவையில் – நீர் வளம் – கனிம வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பதிலுரையில் தகவல்!

**சென்னை, மார்ச் 27 -**

**சட்டப்பேரவையில் - நீர் வளம் - கனிம வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தனது பதிலுரையில், கனிமங்களை சட்டத்திற்குப் புறம்பாக யாரும் எடுத்துச் செல்ல முடியாது எனக் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆற்றிய பதிலுரை வருமாறு:-

இங்கே mines பற்றிப் பேசினார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். எத்தனையோ பத்திரிகைகளில் விவரமாக எழுதுகிறார்கள்; "கனிமங்கள் எல்லாம் போய் விட்டன" என்றெல்லாம் ஒரே மாதிரியாக எழுதுகின்றன. அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன்.

104 சுரங்கங்கள் மற்றும் 1,494 குவாரிகள் இப்போது நம்மிடையே நடைமுறையில் இருக்கின்றன. 2024-25-ஆம் ஆண்டில் 408,62 இலட்சம் மெட்ரிக் டன் பெருங்கனிமங்கள், 618.27 இலட்சம் கன மீட்டர் சிறுகனிமங்கள் மற்றும் 18.97 இலட்சம் மெட்ரிக் டன் 31 வகை சிறுகனிமங்கள் இவையெல்லாம் உற்பத்தி செய்திருக்கிறோம். புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் கடந்த வருட வருவாயைச் சொல்கிறேன். எப்போது எவ்வளவு வருவாயை நாங்கள் உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்கிறேன்.

2020-2021-ஆம் ஆண்டு வருவாய், 983 கோடி ரூபாயும், 2021-2021-ஆம் ஆண்டு 1,212 கோடி ரூபாயும், 2022-2023-ஆம் ஆண்டு 1,679 கோடி ரூபாயும், 2023-24-ஆம் ஆண்டு 1,835 கோடி ரூபாயும், 2024-25 இந்த ஆண்டு பிப்ரவரி வரை 1,704 கோடி ரூபாயும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அவர்களுக்கு வருமானம் இல்லாமலா போய் விட்டது? ஆக நான்காண்டுகளில் எங்களுடைய ஆட்சியில் 6,432 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது.

அதேபோன்று, 45 கல்குவாரிகளை ஏலம் விட்ட வகையில், அதிலே 125.30 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது.

**பசுமை நிதி!**

அண்டை மாநிலங்களுக்கு கனிமங்கள் போய்விட்டன என்று தற்போது கூட நிறைய பேசினார். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன், ஒன்று நீதிமன்றத்திலேயே சொல்லிவிட்டார்கள். அண்டை மாநிலங்களுக்கு கனிமங்களை எடுத்துக்கொண்டு போகக் கூடாது என்று ஒருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். அப்போது, "அப்படி எல்லாம் கிடையாது, ஒரு மாநிலத்திலிருந்து, அண்டை மாநிலங்களுக்கு எடுத்துக் கொண்டு போகலாம், இதை தடை செய்ய முடியாது" என்று உயர்நீதிமன்றத்தில் தெரிவித்து விட்டார்கள். ஆக, நாங்கள் சட்டத்திற்குப் புறம்பாக கனிமங்களை அண்டை மாநிலங்களுக்கு அனுப்பவில்லை. சட்டத்திற்கு உட்பட்டுதான் அனுப்புகிறோம். அப்படிதான் நீங்களும் அனுப்பியிருக்கிறீர்கள். அப்படி எடுத்துச்செல்லும்போது, நேரடியாக லாரியைக் கொண்டு வந்து இந்த கனிமங்களையெல்லாம் வாரி கொட்டிக்கொண்டு போய்விடுவார்கள் என்று நிறைய பேர் நினைக்கிறார்கள். அப்படி செய்ய முடியாது. அண்டை மாநிலங்களுக்கு கனிமங்களைக் கொண்டு செல்ல அவர்கள், அந்தக் கனிமங்களுக்கான உரிமைத் தொகை கட்ட வேண்டும். மாவட்ட கனிமநிதி ஆகியவற்றோடு, உரிமைத் தொகையில் 50 சதவிகிதம் பசுமை நிதியாகக் கொடுக்க வேண்டும். இவ்வளவும் கொடுத்த பிறகுதான் அந்தக் கனிமத்தைக் கொண்டு செல்ல முடியும். சரி, இவ்வளவும் கொடுத்துவிட்டு நேரடியாக எடுத்துச் செல்வார்களா என்றால் இல்லை,

நம்முடைய எல்லையைத் தாண்டி, புளியரையில் இருக்கின்ற ஒரு இடத்தில் அனைத்தையும் சோதனை செய்துதான் அவர்கள் அனுப்புவார்கள். அதையும் தற்போது கணினிமயமாக்கிவிட்டதால், அனைத்தையும் கணினியிலே பார்த்துக்கொள்ளலாம். ஆக, அதையும் தாண்டிப் போக வேண்டும்.

எனவே, இங்கிருந்து திருநெல்வேலி உள்ளிட்ட எல்லா இடங்களிலும் யாரும் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்ல முடியாது. ஆகையால் இனி கனிம வளங்கள் கொள்ளை போகிறதென்று யாரும் சொல்ல முடியாது. காரணம், ஒரே ஒரு சிறிய கல்லைக்கூட, நம்முடைய அனுமதியில்லாமல் எடுத்துச் செல்ல முடியாது. அப்படி எடுத்துச் சென்றிருந்தால் அவற்றையெல்லாம் நாங்கள் இடையிலே பிடித்திருக்கி றோம்.



### நீர்வளத்துறைக்கு - சென்னையில் நவீன வசதிகளுடன் அலுவலகக் கட்டடம்!

**இன்னொரு மகிழ்ச்சியான செய்தி.** Beach Road**ல் பொதுப் பணித் துறை கட்டடம் ஒன்று பார்ப்பீர்கள், அதுதான் ஒரு காலத்தில் பொதுப் பணித் துறையின்** building. **எங்களுக்குச் சொந்தம் என்று அவர்கள் எடுத்துக்கொண்டு விட்டார்கள். எனவே, நீர்வளத் துறைக்கு இன்றைக்கு ஒரு இடமே இல்லை. என்னுடைய துறைக்கு இடமே இல்லையென்று முதலமைச்சர் அவர்களிடம் கேட்டேன். உடனடியாக ஒத்துக்கொண்டார்கள்.**

கடந்த 2021-2022-ஆம் ஆண்டில் சட்டத்திற்கு புறம்பாக கனிமங்களை எடுத்துச் சென்ற 7,454 வாகனங்கள்பி டிக்கப்பட்டுள்ளன, 2022-2023-ஆம் ஆண்டில் 4,723 வாகனங்கள் பிடிக்கப்பட்டுள்ளன, 2023-2024-ஆம் ஆண்டில் 5,745 வாகனங்கள் பிடிக்கப்பட்டுள்ளன, 2024-2025 -ஆம் ஆண்டில் 3,750 வாகனங்கள் பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டு களில் 21,163 வாகனங்களைப் பிடித்திருக்கிறோம். அடுத்து, சுரங்கங்களைப் பொறுத்தவரை, அதிகமாக கனிமங்களை வெட்டியெடுத்து விட்டார்கள் என்று தெரி விக்கிறார்கள். ஒரு ஜில்லாவிற்கு ஒரு AD தான் இருக்கிறார். குவாரிகள் பெரும்பாலும் மலையோரங்களிலும், காடுகளிலும் தான் இருக்கின்றன. அங்கு நேரடி யாகச் சென்று பார்ப்பது கஷ்டம்.

ஆகையினால்தான் சில நேரங்களில் நாங்கள் ஒரு teamஐ அனுப்பி inspect செய்கிறோம். ஆனால், அவர்கள் அளவீடு செய்தார்களா இல்லையா என்பதுதான் பெரிய பிரச்சினை.

**ஆளில்லா விமானம் மூலம் அளவீடு!**

இப்போது, drone மூலம் அளவீடு செய்யப்படுகிறது. Drone மூலம், அனைத்து இடங்களிலும் அளவீடு செய்யப்பட்டுள்ளது. அதனால், யார் எவ்வளவு எடுத்திருக்கிறார்கள், எவ்வளவு எடுக்கலாம் என்ற விவரங்களெல்லாம் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனடிப்படையில், 2023 - 2024-ஆம் ஆண்டில் முதற் கட்டமாக அளவீடு செய்யப்பட்ட 203 குவாரிகளில் 152 குவாரிகளில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு, 74.7 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு, அதில் 7.7 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது. 2023-2024-ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக 116 குவாரிகளில் ஆளில்லா விமானம்மூலம் அளவீடு செய்யச் சொல்லியிருக்கிறோம். அவற்றையும் நாங்கள் விரைவில் கொண்டுவந்து சேர்த்து விடுவோம்.

அடுத்து, இலவச மண் எடுத்துக்கொள்வது குறித்து. நமக்கு முன்னால் இருப்பவர்களுக்கு ஒருமுறை சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் 8.7.2024 அன்று விவசாயப் பெருமக்கள் மற்றும் மண்பாண்டம் செய்பவர்கள் அரசு கட்டுப்பாட்டிலுள்ள ஏரி மற்றும் நீர்நிலைகளிலுள்ள வண்டல் மற்றும் களிமண் கட்டணமின்றி எடுத்துச் சென்று பயன்பெற ஒரு மகத்தான திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 21,199 நீர்நிலைகள் அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. 70.83 இலட்சம் கன மீட்டர் கனிமங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 58,088 விவசாயி கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் இதன்மூலம் பயனடைந்துள்ளனர். எனவே, நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, TAMIN. TAMINஐப் பொறுத்தவரை, கடந்த ஆட்சிக் காலத்திலேயே சுண்டிப்போய்விட்டது. இருந்தாலும் நாங்கள் விடவில்லை. நாங்கள் பொறுப்பேற்ற பிறகு எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக நட்டத்திலேயே இயங்கிவந்த அந்த நிறுவனம் 2020-2021-ல் ரூபாய் 3,959 இலட்சம் நஷ்டம்; 2021-2022-ல் ரூபாய் 1,600 இலட்சம்நஷ்டம்; 2022-2023-ல் ரூபாய் 466 இலட்சம் நஷ்டம்; 2023-2024-ல் ரூபாய் 109 இலட்சம் இலாபம்; (மேசையைத் தட்டும் ஒலி) 2024-2025-ல் (பிப்ரவரி வரை) ரூபாய் 125 இலட்சம் இலாபம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இலாபம் ஈட்டியிருக்கிறோம். ஒன்றே ஒன்று, விலைவாசி ஏறியிருக்கிறது என்ற நிலைமை இருந்திருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு எல்லா வகையிலும் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எனவே, நீங்கள் சொன்னவற்றை எல்லாம் சரி செய்திருக்கிறோம்.

ஆகவே, இங்கு பேசிய உறுப்பினர்கள் கனிம வளத்தை எடுத்துச் செல்கிறார்கள், கனிம வளம் கொள்ளை போயிற்று என்றெல்லாம் சொல்லக்கூடாது. கொள்ளை போகவே முடியாது; எங்கேனும் அப்படி எடுத்துச் சென்றாலும், அது முடியாது. ஏனெனில், 2 இடங்களில் check செய்கிறோம். அதனால், இதை ஒரு fashion ஆக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதையும் நீங்கள் மறந்துவிட வேண்டும். MSandன் நிலைமைகள் இன்று கட்டுக் கடங்காமல் போயிருக்கின்றன. அதையும் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை தற்போது எடுத்திருக்கிறோம். விரைவிலே அதற்கும் தீர்வு வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு புதிய அறிவிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில், நீர்வளத் துறை மானியக் கோரிக்கை தொடர்பான அறிவிப்புகளில், ஓர் அறிவிப்பு விடுபட்டிருக்கிறது. அதனால், குறைவாக இருக்கிறது. விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் தாரகை கத்பட், தனது தொகுதியில் முல்லையாற்றின் குறுக்கே ஒரு புதிய தடுப்பணை கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருந்தார். மாங்கோடு-புலியூர் சாலையில், பாகோடு, அண்டுகோடு பகுதிகளில் வாழும் விவசாயிகள் நலனைக் கருதி அதைக் கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

முல்லையாற்றின் குறுக்கே 2.9 கோடி ரூபாய் செலவில் ஒரு தடுப்பணை கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலுரையாற்றினார்.

---

சென்னை - கிண்டி - முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில்

## மாநில - மாவட்ட வன அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்!

### கதர் – வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது!



சென்னை, மார்ச் 27–

கதர் மற்றும் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தலைமையில் மாநில அளவிலான மாவட்ட வன அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் 24.03.2025 அன்று கிண்டி முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கதர் மற்றும் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் மாநில அளவிலான மாவட்ட வன அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் சென்னை வேளச்சேரி( கிண்டி) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மாவட்;ட வன அலுவலர்களுடன் மாவட்ட வாரியாக வனத்துறையில் மூலம் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் அதன் முன்னேற்றம் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார். வனத்துறை மூலம் நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

மேலும், வன உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் வன உயிரின வேட்டைத்தடுப்பு குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வேட்டைத்தடுப்பு முகாம்கள் அமைக்க வேண்டும் எனவும், அரசு அறிவித்துள்ள பணிகள் அனைத்தையும் விரைவுபடுத்த வேண்டும் எனவும், வனப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு இன்னல் ஏற்படா வண்ணம் அவர்களது அடிப்படை தேவைகளான சாலை மற்றும் இதர வசதிகளை சட்டத்திற்குட்பட்டு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ள வேண்டும் எனவும், பழங்குடியின மக்கள் வசிக்கும் மலைப்பகுதிகளில் சாலை வசதி மற்றும் நிலுவைப்பணி களை விரைந்து முடிக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், யானை மனித முரண்பாடுகளை தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும்,காட்டுப்பன்றிகளை அப்புறப்படுத்துவதற்கும், அதனால் வேளாண் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கும் வண்ணமும் ஏற்கவே உத்தரவிடப்பட்;ட அரசாணையின் படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார். வன உயிரினங்களின் நீர்தேவையை தீர்க்கும் வண்ணம் ஏற்கனவே உத்தரவிடப்பட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று வனத்துறை அமைச்சர் கூறினார்.

இக்கூட்டத்தில் முதன்மை தலைமை வனப்பபாதுகாவலர் மற்றும் துறைத்தலைவர் சீனிவாஸ் ராரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ்குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை திட்ட இயக்குநர் ஐ.அன்வருதின், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாஷீஷ் ஜானா, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) முனைவர் நாகநாதன், இணை இயக்குநர் திருமதி. தமிழ்மொழி அமுது மற்றும் அனைத்து மாவட்ட வன அலுவலர்கள, வனத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில், நங்காஞ்சி ஆற்றின் பாசன கால்வாய்க்கு இடமளித்த 65 விவசாய பெருமக்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 1 கோடியே 82 இலட்சம் வழங்கி, பின்னர், ரூபாய் 30.90 லட்சம் மதிப்பில், 44 பயனாளிகளுக்கு, விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களையும் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

தமிழ்நாடு முதலமைச்சருக்கு

## இருக்கும் அதிகாரம் எனக்கு இல்லை!

### பா.ஜ.க. உறுப்பினர் கேள்விக்கு புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி வேதனை!

புதுச்சேரி, மார்ச் 27 -

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெறாவிட்டால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் புதுச்சேரி மாநிலம் பின்தங்கிய நிலையில் தான் இருக்கும் என முதல்வர் ரங்கசாமி ஆதங்கப்பட்டார்.

புதுச்சேரி சட்டப்பேரவை கடந்த 10-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது புதிய தொழிற்சாலைகள் கொண்டுவருவது குறித்து சூடான விவாதம் நடந்தது.

**அசோக்பாபு(பாஜ):** புதுவை மாநிலத்தில் புதிதாக தொழில் தொடங்க ஏதுவாக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தும் திட்டம் அரசிடம் எந்நிலையில் உள்ளது? கரசூரில் தொழில் பூங்கா அமைக்க ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளதால் தொழில் முனைவோருக்கு எப்போது இடத்தை அரசு பிரித்து வழங்கும் என்று கேள்வி எழுப்பினார்.

**முதலமைச்சர் ரங்கசாமி:** கரசூரில் மனைகளாக பிரிக்கும் பணி நடந்து வருகிறது. ஜூன் மாதம் தொழிற்சாலைகளுக்கு நிலம் பிரித்து கொடுக்கப்படும். முதலீட்டாளர்கள் மாநாடு நடத்துவது குறித்து பரிசீலித்து வருகிறோம். யார் வருவார்கள்? என தெரியவில்லை?

**அசோக்பாபு (பா,ஜ,க,):** புதிய தொழிற்சாலைகள் அமைக்க தொழிலதிபர்கள் தயாராக உள்ளனர்.

**முதலமைச்சர் ரங்கசாமி:** தாராளமாக அழைத்து வாருங்கள். அவர்களுக்கு உடனடியாக நிலம் ஒதுக்கி தருகிறோம். தொழிற்சாலைகளை தொடங்க சொல்லுங்கள். ஒரு தொழிற்சாலை தொடங்க அனுமதி பெறுவது எவ்வளவு கடினமாக உள்ளது? என எல்லோருக்கும் தெரியும். இதனால்தான் ஒற்றை சாளர முறையை கொண்டுவந்தோம். தொழிற்சாலைகள் தொடங்கி விட்டு 3 மாதத்தில் அனுமதி பெறலாம் என கூறினோம். அதற்கு பிறகும் எந்த தொழிற்சாலையும் வரவில்லை. அதேநேரத்தில் அண்டைமாநிலமான தமிழகத்தின் வானூர், இரும்பையில் பல தொழிற்சாலைகளை பார்க்க முடிகிறது. அதுவும் எவ்வளவு சீக்கிரத்தில் வருகிறது என்பதை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அந்த அளவிற்கு அவர்களுக்கு உள்ள அதிகாரம் தான் முக்கிய காரணம்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று, பல்வேறு தொழில் முனைவோரை சந்தித்து தொழிற்சாலை துவங்க அழைப்பு விடுத்தார். அவர்களும் தமிழ்நாடு முதல்வரை நேரில் சந்திக்கின்றனர். அவரும் பல சலுகைகள் அளித்து தொழிற்சாலைகள் வருகின்றன. ஆனால் புதுச்சேரியில் அதுமாதிரி எந்த அதிகாரமும் முதல்வருக்கு இல்லை. அதாவது தமிழ்நாடு முதல்வருக்கு இருக்கும் அதிகாரம் எனக்கு இல்லை. இங்கு ஒரு தொழிற்சாலை தொடங்குவது எவ்வளவு பெரிய சங்கடமாக உள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும். நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளுக்கு சலுகை வழங்க, ஒன்றிய அரசின் அனுமதிக்காக காத்திருக்க வேண்டி உள்ளது. மின் இணைப்பு பெறுவதற்கே தொழிலதிபர்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். இதற்கு காரணம் நிர்வாகம் தான். தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுப்பது சம்பந்தமாக தலைமைச் செயலர் அனுமதி அளித்து கோப்பு அளித்தால் தான் அரசு முடிவு செய்ய முடியும் என்ற நிலை உள்ளது. இதனால் தான் மாநில அந்தஸ்து வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். இது எனக்காக மட்டுமல்ல, எதிர்காலத்தில் யார் வந்தாலும், தேர்வு செய்யப்பட்ட அரசுக்கு அதிகாரம் வேண்டும் என்பதற்காக கேட்கிறோம். மாநில அந்தஸ்து பெறாவிட்டால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும், புதுவை பின் தங்கியே இருக்கும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.